
www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்



# விடுதலை வீரர்கள் விடுதலை !




மட்டக்களப்புச் சிறை மீட்பு

# திட்டமிட்டபடியே நடந்தது

**PEOPLE'S LIBERATION ORGANIZATION OF TAMIL EELAM (PLOT)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மட்டக்களப்புச் சிறையில் இருந்து தமிழீழ விடுதலைப் போராளிகள் மீட்பு:**

**1983** யூலை 23ந்திகதி யாழ்ப்பாணத்தில் 13சிங்கள இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் போராளிகளால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் அதிபயங்கர இனக்கலவரம் **ஆரம்பித்தது!** இந்த கொலைகளுக்குப் பழிதீர்க்கும் நோக்குடன் 25 — ம்,27 — ம் திகதிகளில் கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த 53தமிழீழ விடுதலைப் போராளிகளை சிங்கள அரசு உயிர்ப்பலி கொண்டது!சிறைச்சாலையில் நடைபெற்ற அப்படு கொலைகளை இராணுவம்,சிறை உயர்அதிகாரிகள்,காவலாளிகள், மற்றும் சிங்கள கைதிகளும் அரசாங்கத்திடம் இருந்து அனுமதி பெற்றே செய்து முடித்தனர்!இத்தாக்குதலில் இருந்து உயிர்தப்பிய 18 விடுதலைப் போராளிகளையும் அண்மையில் இருக்கும் மகசின் என்னும் சிறைச்சாலையில் இருந்த வேறு18 விடுதலைப் போராளிகளையும் 28— 7— 83 அன்று (அதாவது கொலை நடந்த மறுதினம்)மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு விமானமூலம் இடமாற்றினர். இடமாற்றப்பட்ட 36 போராளிகளும் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் மட்டக்களப்பு சிறையில்,எப்,ஜி.ஆகிய பகுதிகளில் (வார்டு) ஒரேகட்டிடத்தில் அடைத்து வைக்கப்பட்டனர்!

தொடர்ந்து சிறைச்சாலைகளில் நாம் இருப்போமாயின் யூலை 25ம் 27ம் திகதிகளில் நடந்தவை போன்று உயிர்தப்பிய எமக்கும் நடக்கலாம். ஏனெனில் அரசாங்க அனுமதியுடன் அந்த கொலைகள் நடந்ததுமல்லாமல் அந்த கொலைகளுக்காக இதுவரை ஒரு நபரைத்தன்னும் சந்தேகத்தின்பேரில் கூட அரசாங்கம் கைதுசெய்யவில்லை.அரசபயங்கரவாதம் தமிழ் மக்கள் மீதும் சிறை வைக்கப்பட்டிருந்த விடுதலைப் போராளிகள் மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தது. என்றோ ஒருநாள் சிறைக்குள்ளேயே நாம் எம் உயிர்களைத் துறக்கநேரிடும் என்பது உறுதியாகிவிட்டது.எனவே மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட மறுதினமே அங்கிருந்து தப்புவதற்கான திட்டங்களைத் தீட்ட ஆரம்பித்தோம்!

அதன்படி முதலில்"தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தைச்சேர்ந்த ஞானசேகரன்(ராஜன்),மாணிக்கம் தாசன்,வாமதேவன் ஆகியோர் காந்திய இயக்கத் தலைவர் திரு.டேவிட் ஐயா (பொறியியலாளர்)அவர்களின் ஆலோசனையின் மூலம் தமக்கான பொறுப்புக்கள் ஏற்று செயல்பட ஆரம்பித்தனர். இது தவிர தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பேராசிரியர் நித்தியானந்தன்,போதகர்.ஜெயதிலகராஜா,அருட்.திரு.சின்னராசா ஆகியோர்... பற்றி தமது இயக்கத்துடன் தொடர்புகொண்டனர். தம்பிப்பிள்ளை மகேஸ்வரன், தேவானந்தா ஆகியோர் தமது இயக்கங்களுடனும் தொடர்புகொண்டிருந்தனர்.

"தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச்"சேர்ந்த 16போராளிகள் வெலிக்கடைச்சிறைச்சாலையில் கொல்லப்பட்டனர்! **இதில் கழகத்திற்கு அதிக** அளவு இழப்பு ஏற்பட்டது!ஆகவே எஞ்சி இருந்தவர்களை மீட்பதற்கான கடமைப்பாடு மிக அதிக அளவில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தையே சார்ந்திருந்தது.தனித்தனியாக ஒவ்வொரு இயக்கங்களும் தமதுமுயற்சிகளை மேற்கொண்டன.இதில் எந்தவித முன்னேற்றங்களையும் காணுததால் திரு.டேவிட்ஐயா அவர்கள் உள்ளே இருந்த ஒவ்வொரு இயக்கங்களுக்கும் பொறுப்பானவர்களை அழைத்து அவரவர் செய்த முயற்சிகளைப்பற்றி வினவினர்.முயற்சிகள் தனித்தனியே மேற்கொள்ளப்பட்டதால் **காலதாமதம் ஏற்படுவதைக்கண்ட** திரு.டேவிட்ஐயா



அவர்கள் சிலபணிகளில் இசைந்துசெயற்படுமாறு கேட்டுக்கொண்டார். தொடர்ந்து அவரால் வரையப்பட்ட சிறைச்சாலையின் வரைபடத்தை அனைவருக்கும் காண்பித்து நாம் அனைவரும் எவ்விதம் செயற்படவேண்டும் என்பதை நீண்ட நேரமாக விளக்கினர்.

**இதையடுத்து முதல் நடவடிக்கையாக தமிழீழ மக்கள் விடுதலைக்கழக தலைமைச் செயலகத்துடன் தொடர்புகள் ஏற்படுத்தப் பட்டன.**

சிறைச்சாலையின் இராணுவ பாதுகாப்பைக் கவனிப்பதற்காக 24மணி நேரமும் சிறைக்குள்ளேயே கழகத்தோழர்களை கடமைக்கு அமர்த்தினோம். "எப்" வார்ட்டு-இது கட்டிடத்தின் மேல்மாடியில் அமைந்திருக்கிறது. இது மண்டபம் போன்ற அமைப்பைக் கொண்டது.இம்மண்டபத்தினுள் குளியலறை,கழிவறைகள் அமைக்கப்பட்டிருந்தன.கழிவறையிலிருந்து ஜன்னலினூடாக வெளியே நடைபெறும் இராணுவ ரோந்துகளை கவனிக்கக்கூடியதாக அந்தக் கட்டிடம் அமையப்பெற்றிருந்தது.இது எமக்குப் பெரிதும் அனுகூலமாக இருந்தது.கழிவறையிலிருந்துவரும் துர்நாற்றத்தையும் பொருட்படுத்தாது எமது கழகப் போராளிகள் ஒவ்வொரு இரண்டுமணித்தியாலத்துக்கு ஒருவர் வீதம் ஒன்றரைமாதகாலம் இராணுவ ரோந்தினை கவனித்து அவர்களது நடமாட்ட **நேரங்களைக் குறிப்பெடுத்துக்** கொண்டனர்.இரவு வேளையில் சிறையதிகாரிகளும் மொத்தம் 11பேர் கடமையில் இருப்பார்கள்.இரவு 8.30மணிக்கு மேலும் 11 அதிகாரிகள் இரண்டாவது கடமைக்காக உள்ளே வருவார்கள்.அத்துடன் இரவு 8.30 மணிக்கு இருவர் துப்பாக்கி ஏந்தி காவல் புரிவார்கள்.இது ஒரு முக்கிய அம்சமாக கருத்திற்கொள்ளப்பட்டது.இந்த நாட்களில் "தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச்" சேர்ந்த இராமநாதன் என்பவர் விமானப்படையினரின் **தாக்குதலுக்குள்ளாகி** பலத்த காயங்களுடன் கொழும்பு இராணுவ மருத்துவமனையிலிருந்து 7.9.83 அன்று மட்டக்களப்புச் சிறைக்கு இடம்மாற்றப்பட்டார்.நடக்கமுடியாத நிலையில் இருந்த இவரையும் மீட்டுச்செல்ல வேண்டிய பொறுப்பு "தமிழீழமக்கள் விடுதலை கழகத்தைச்" சார்ந்திருந்ததால் இவர் வந்த அதே தினத்தில் இருந்து இவரைத் தூக்கிச் செல்வதற்கான பயிற்சிகள் சிறையினுள் மேற்கொள்ளப்பட்டன.

சிறைச்சாலையை விட்டு **வெளியேறினல் தரைமார்க்கமாக** இரண்டு வழிகள் இருக்கின்றன.முன் பகுதியால் ஒரு பாலமும்,பின் பகுதியில் ஒரு பாலமும் இவ்வழிகளை இணைக்கின்றன.இச் சிறைச்சாலை ஒரு தீவில் அமைந்திருப்பதால் ஏனைய பகுதிகள் நீரால் சூழப்பட்டுள்ளன.முன்பகுதியில் அமைந்திருக்கும் பாலத்தருகில் விமானப்படைத்தளமும் உள்ளன.சிறைச்சாலையில் இருந்து ஒரு செய்தி கிடைக்கப் பெறுமானுல் இரண்டு பாலங்களும் முடப்பெற்று தடைபோடப்படும் (பேரியர்). சிறைச்சாலைக்கும் போலிஸ் நிலையத்திற்கும் இடையே உள்ள தூரம் அரை மைல்,சிறைச்சாலைக்கும் விமானப்படைத்தளத்திற்கும் இடையேஉள்ள தூரம் முக்கால் மைல்,சிறைச்சாலைக்கும்,இராணுவமுகாமுக்கும் இடையேஉள்ள தூரம் ஒன்றரை மைல்.எவ்வளவு தூரம் நாம் சிறைச்சாலையை சப்தமின்றிக் கைப்பற்றுகிறோமோ அவ்வளவுக்கு எமக்கு ஏற்படும் ஆபத்துகளை தவிர்க்கலாம்.சிறைச்சாலையின் பின் பகுதியில் இருந்து 200யார்தொலைவில் இருக்கும் வாவிமூலம் (ஓடை) கிழக்கு மாகாணப் பெருங்கடலை அடையலாம்.சிறையைவிட்டு வெளியேறும் நாம் அந்த வாவியினூடே பெருங்கடலை சென்றடைவதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி கழகத்தோழர்களுக்கு தகவல் கொடுத்திருந்தோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதன்படி முன்னேற்பாடாக அந்த வாவியில் படகுகளைச் செலுத்த முடியுமா என்பதைக் கண்டுகொள்ள பரீட்சார்த்தமாகப் படகுகள் செலுத்திப் பார்க்கப்பட்டன. அதில் நிலபகுதிகள் ஆழமற்றவையாகவும், தரைதட்டுவதாலும் அந்தமார்க்கம் எமக்கு ஏற்றதல்ல என அறிவிக்கப்பட்டது. இதனால்படகு மூலம் வாவியில் செல்லும் திட்டம் கைவிடப்பட்டு தரைமார்க்கமாக வாகனங்கள் மூலம் செல்வதற்கான ஒழுங்குகளை உடனடியாகச் செய்யுமாறு கழகத் தோழர்களுக்கு அறிவிக்கப்பட்டது. வாகனத்தில் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம்நோக்கி பிரயாணம் செய்வதாயின் 14போலீஸ் நிலையங்களையும், 7இராணுவ முகாம்களையும் கடந்துசெல்ல வேண்டி ஏற்படும். இதுவும் எமக்கு சாத்தியப்படாதஒன்று ஆகவே வாகனமூலம் குறிப்பிட்ட ஒரு கடற்பிரதேசத்தை அடைந்து அங்கிருந்து விசைப்படகு மூலம் திருகோணமலையைச் சென்றடையலாம் எனதீர்மானிக்கப்பட்டது. இந்தமார்க்கத்தில் மட்டக்களப்பு போலீஸ்நிலையம் ஒன்றைமட்டுமே கடக்க வேண்டும். இந்த அடிப்படையில் சிறையின் உள்ளேயும், வெளியேயும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. உள்பொறுப்புக்களை, அதாவது இராணுவ, போலீஸ் ரோந்தினைக்கவனிப்பது, சிறை அதிகாரிகளின் கடமை நேரங்களையும், அவர்களது பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கவனிப்பதற்கான பொறுப்பினை தோழர் மாணிக்கம் தாசன் ஏற்றுக்கொண்டார். சிறையுடைப்பின்போது ஏற்படும் தாக்குதலில் விடுதலைப் போராளிகளுக்கு ஏற்படும் காயங்களுக்கு முதலுதவி செய்வதற்காக பலவகை மருந்துகளையும், இலங்கையின் முழு வரைபடம், திசையறிகருவி, பிளாஸ்ரர் போன்றவற்றை கழகத் தோழர்கள் மூலம் பெற்றுக்கொண்டோம்.

சிறை உடைக்கப்பட்ட பின் அந்தந்த இயக்கங்களைச் சேர்ந்த விடுதலைப் போராளிகளை அந்தந்த இயக்கங்களே பொறுப்பேற்க வேண்டும் என்று முதலில் தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிட்ட ஓர் திகதிக்குள் அவரவர் சார்ந்துள்ள இயக்கங்களின் முடிவுகளைத் தெரிவித்தாக வேண்டுமென்று திரு. டேவிற் அவர்கள் பணித்ததின் பேரில் செப்டம்பர் 18ந்தேதி பொறுப்பானவர்கள் ஒன்று கூடி தமது இயக்க ஏற்பாடுகள் பற்றித் தெரிவித்தனர். இதில் "தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்" இயக்கத்தைச் சேர்ந்த திரு. நித்தியானந்தன் அவர்கள் தமது இயக்கத்திடம் இருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றும் "தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்" எடுக்கும் முடிவுகளுக்கு தாமும் இணைந்து செயற்படுவதாகவும் தெரிவித்தார். "ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர்" என்று தம்மைக் கூறிக்கொள்ளும் தேவானந்தா ஏற்கனவே தமது இயக்கத்தினருடன் தொடர்பு கொண்டிருந்ததாகவும் தற்போது எமக்கு எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என்றும் எனவே எம்முடன் தாமும் இணைந்து செயல்பட விரும்புவதாகக் கூறினார். த. மகேஸ்வரன் தன்னையும் தன் இயக்கத்தைச்சேர்ந்த மூவரையும் சிறைவாசலில் இருந்து அழைத்துச்செல்ல தனது நண்பர்கள் எந்தநேரமும் தயாராக இருப்பதாகக் கூறினார்.

எமது திட்டத்தின்படி ஏற்கனவே வேனும், மூன்று விசைப்படகுகளும் எம்மை மீட்டுச்செல்வதற்காக மட்டக்களப்பிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. நாம் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட மறுவாரம் எமது கழக தோழர்களுக்குத் தகவல் கொடுக்கையில் 1983 செப்டம்பர் 21ம்நாள் நாம் சிறையில் இருந்து தப்பிச் செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் முடிவுபெற்றிருக்க வேண்டுமென வெளி ஏற்பாடுகளுக்கு பொறுப்பானவர்களிடம் தெரிவித்திருந்தோம். இதைக் கழகத்தில் இருந்த இருவரைத் தவிர வேறு எவரும் அறிந்திருக்கவில்லை. அதன்படி 21ந்திகதி பிற்பகல் [illegible] தெரிவித்தது



போன்று சகல ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டன. என்ற தகவல் கிடைத்தது. தகவலைத் திரு. டேவிற் ஐயா அவர்களிடம் தெரியப்படுத்தி அவரது வரைபடத்தைக் கொண்டு சிறைச்சாலையைக் கைப்பற்றுவதற்கான திட்டம் பற்றி மீள ஆராயப்பட்டது. அந்த வேளையில் "தமிழீழ விடுதலைப் புலிகள்" இயக்கத்தைச் சேர்ந்த நால்வரும் எம்முடன் வாகனங்களில் வரவில்லை என்றும் தாம் சிறைவாசலில் இருந்து வேறுவழியில் நடந்தே செல்வதாகவும் தெரிவித்தனர். த. மகேஸ்வரனும் அவரது இயக்கத்தினரும் முன்பு கூறியது போன்றே தமது நண்பர்கள் தம்மை அழைத்துச் செல்வதற்காக மட்டக்களப்பிற்கு வந்திருப்பதாகவும் கூறினார். தேவானந்தரிடம் வினவியதற்கு தம்மவரிடம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று கூறினார். எது எப்படி இருப்பினும் செப்டம்பர் 23ம் நாள் சிறையில் இருந்து வெளியேற வேண்டும் என்றகட்டாயத்திற்கு உள்ளானோம். ஏனெனில் எமக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றிற்காக எம்மைக் கொழும்பு உ[illegible] நீதிமன்றத்தில் செப்டம்பர் 26ந்தேதி ஆஜர் செய்யும்படி அரசாங்கத்திடம் இருந்து மட்டக்களப்பு சிறை அதிபருக்கு உத்தரவு வழங்கப்பட்டிருந்தது. இவ்வுத்தரவை சிறைச்சாலை நிர்வாகம் மிக இரகசியமாக வைத்திருந்த போதிலும் ஓர் வழியில் நாம் அதனை அறிந்துகொண்டோம். அந்த உத்தரவில் ஞானசேகரன் (ராஜன்), டறீதரன், மாணிக்கம்தாசன், பாவுஜி, கணேசலிங்கம், பவானந்தன், மகேந்திரன் ஆகிய 7 "தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தைச்" சேர்ந்தவர்களையும், மற்றும் தட்சணாமூர்த்தி என்பவரையும் 25ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணிக்கு இராணுவ பாதுகாப்புடன் கொழும்பிற்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் பற்றி எழுதப்பட்டிருந்தது. இதை அறிந்ததினால் எப்படியும் 25ம் திகதிக்கு முன்னர் சிறையிலிருந்து தப்பித்தாக வேண்டும் என்பதை மிக உறுதியாக மனதில் வைத்துக் கொண்டோம்.

இது பற்றி கழக தோழர்களுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது. கழகத் தோழர்கள் அல்லாத வேறு எந்த இயக்கத்தினருக்கும் இந்தவிடயம் பற்றி நாம் தெரிவிக்கவில்லை. இந்த காலகட்டத்தில் இராணுவத்தினருக்கு எமது காவலைத் தவிர மேலும் வேறொரு பணியையும் அரசாங்கம் வழங்கியிருந்தது. அதாவது ஈழ மாணவர் பொதுமன்றம் பரீட்சை மண்டபங்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இந்த பரீட்சை செப்டம்பர் 19ம்திகதி ஆரம்பித்து தொடர்ந்து 3வாரங்களுக்கு நடைபெற இருந்தது. இதனால் [illegible]ர நாட்களில் இராணுவத்தினர் பரீட்சை மண்டபங்களுக்கும் செல்லவேண்டியதாயிற்று. எம்மை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு காவல்புரிந்து வந்த இராணுவத்தினர் பரீட்சை மண்டபங்களுக்கும் தமது கவனத்தைத் திருப்பவேண்டியிருந்ததால் இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்தியே ஆகவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

சனி, ஞாயிறு ஆகிய ஒய்வு நாட்களில் பரீட்சை நடைபெறுது ஆதலால் இராணுவத்தினரின் முழுக்கவனமும் சிறைச்சாலையில் இருக்கும் போராளிகளின் மீதே சூழ்ந்திருக்கும். ஆகவே, சனி, ஞாயிறு ஆகிய நாட்கள் எமது திட்டத்திற்கு பெரும் இடையூறாக இருக்கும்.

சிறைச்சாலையில் இருந்து கிழக்குப் பக்கமாக 100கஜ தொலைவில் ஓர் பிள்ளையார் கோவில் உண்டு. வாராவாரம் வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6மணி முதல் 7மணிவரை ஆராதனைகள் நடைபெறும். அவ்வேளையில் ஒலிபெருக்கி மூலம் பக்திப் பாடல்கள் இசைக்கப்படும். இந்த ஆராதனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேளையில் சிறைச்சாலையில் இருந்து ஏதாவது ஒலிகள் எழுமானால் அவை வெளியே கேட்க வாய்ப்புக் குறைவு. ஆகவே வெள்ளிக் கிழமையையும் கருத்தில்கொள்ளப்பட்டது. எந்த நேரத்தில் எமது திட்டத்தை மேற்கொள்ளலாம் என்பதைத் தீர்மானிப்பதற்கு பலமணி நேரங்களை ஒதுக்கவேண்டியதாயிற்று. முதலில்எமக்கு வாய்ப்பான நேரங்களைத் தேர்ந்தெடுத்தோம் காலை 5மணி, 9மணி, பி.ப. 1 மணி, 4 மணி, இரவு 7மணி, 11 மணி, அதிகாலை 2மணி, ஆகியநேரங்களைத் தேர்ந்தெடுத்து இவற்றில் அதிக அளவு வாய்ப்பாக இருக்கும் நேரம் இரவு 7 மணியாக இருந்தது. இந்த முடிவினை வெளியே இருக்கும் கழகத்தோழர்களுக்கு அறிவித்தோம். "ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை" சேர்ந்தவர்கள் வெளியே இருந்த எமது கழகத் தோழர்களைச் சந்தித்து தமது நிலை பற்றி விளக்கினர். அதில் தமக்கு வாகனங்களோ, படகுகளோ இல்லாததால் தம்மவர்களையும் கழக வாகனத்திலும், படகுகளிலும் ஏற்றிச் செல்வதற்கு உதவிசெய்யமுடியுமா? என்று கேட்டதை உள்ளே இருந்த எமக்குத் தெரிவித்தனர். சிறை[illegible] இருந்து தப்பும்போது இயக்க வேற்றுமைகள் பாராது நாம் அனைவரும் தமிழர் என்ற நோக்குடன் அனைத்து போராளிகளையும் விடுவிக்க வேண்டியது எமதுகடமையாக இருந்தது. ஆகவே "ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி" கேட்ட உதவியைச் செய்துகொடுக்கும்படி கழகத் தோழர்களுக்கு அறிவித்தோம். அதன்படி எமக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மூன்று படகுகள், ஒருவாகனம், போதாதென கண்டதனால், மேலும் ஒரு வாகனத்தையும், ஒருபடகையும் கழகத் தோழர்கள் மட்டக்களப்பிற்குக் கொண்டு வந்தனர். பாவனைக்குத் தேவையான ஆயுதங்கள் புளியந்தீவுக்குள் கொண்டுவரப்பட்டதாக கழகத்தோழர்கள் தகவல் கொடுத்தனர். இவற்றை அறிந்த திரு. டேவிற்ஐயா உடனே எம்மை (கழகத்தோழர்கள் உட்பட பேராசிரியர் நித்தியானந்தன், ஜெயதிலகராஜா, த. மகேஸ்வரன், மற்றும் தேவானந்தா) அழைத்துச் சரியான நேரத்தையும், வெளிப்பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஆராய்ந்து முடிவு எடுக்கும்படி பணிந்தார். அதுவே இறுதி முடிவாகஇருக்கவேண்டுமென்றும் வலியுறுத்தினார். ஏற்கனவே குறித்துக்கொண்ட நேரங்களில் இருந்து இரவு 7 மணி முதல் 8 மணி வரையிலான நேரத்தை ஒரு மனதாக ஏற்பதெனத் தீர்மானிக்கப்பட்டு அந்நேரத்துக்கான சாத்தியங்களையும் விபரித்தார். பின்னர் வரைபடத்தைக் கொண்டு எமது பகுதியிலிருந்து (வார்டு) புறப்படும் நாம் எப்படிப் பிரதான வாயிலைக் கைப்பற்றுவது என்பதற்கான திட்டத்தை ஆராய்ந்தோம். எமது கட்டட வாசலால் பிரதான வாசலுக்குச் செல்வது கடினமானால் ஜன்னல் வழியே இறங்குவதற்காக ஏற்கனவே நாம் ஜன்னல் கட[illegible]களை அறுத்து வைத்திருந்தோம். ஜன்னல் கம்பிகள் ஏறக்குறைய ஒருமாதத்துக்கு முன்னர் அறுக்கப்பட்டு விட்டது. இதற்கு வேறு ஓர் காரணமும் இருந்தது. இராணுவம் எந்தநேரமும் எம்மைத் தாக்கலாம். அப்படித் தாக்குவதற்கு வந்தால் சிறை அதிகாரிகள் எம்மைத் திறந்துவிட மாட்டார்கள். கட்டடத்தை விட்டு வெளியேறுதவரை எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளவும் முடியாது, இராணுவத்தை எதிர்த்துத் தாக்கவும் முடியாது என்று கண்டதால் எமது பாதுகாப்புக் கருதி ஜன்னல் கம்பிகளை முன்னதாகவே வெட்டி அதைக் கண்டுபிடிக்காத வண்ணம் வேறு உபாயங்களைக் கையாண்டுகொண்டோம். பிரதான வாசலுக்குச் சென்று வாசலில் இருக்கும் இரண்டு அதிகாரிகளைப் பிடிப்பதற்காக முதலில் ஐவரைத் தேர்ந்தெடுத்தோம். அதில் கழகத்தைச் சேர்ந்த ஞானசேகரன், மாணிக்கம்தாசன், பவானந்தன், த. மகேஸ்வரன், "ஈழமக்கள் புரட்சிகர முன்னணியைச்" சேர்ந்த தேவானந்தா ஆகியோர் தெரிவாகினர். இரண்டு அதிகாரிகளைப் பிடிப்பதற்கு



ஐவரைத் தேர்ந்ததின் காரணம் பிரதான வாசலுக்கு இரண்டு கதவுகள் இருக்கின்றன. அந்த இரண்டு கதவுகளுக்கிடையே உள்ள தூரம் 12அடி. அதிகாரிகள் இருவரும் அந்த இரண்டு கதவுகளுக்குள்ளே தான் இருப்பார்கள். இரண்டு கதவுகளிலும் உட்பகுதியில் இருப்பது இரும்புக் கம்பியிலான கதவு. ஆகவே கதவுகள்பூட்டப்பட்டிருக்கும்போது துப்பாக்கி முனையில் அந்த இரு அதிகாரிகளையும் நிறுத்தி வைத்துக் கொண்டு அக்கதவை உடைத்துக்கொண்டுதான் அவர்களை ஏதாவது செய்யமுடியும் என்பதால் ஐவர் அதற்குத் தேவைப்பட்டனர்.

அடுத்தபடியாக அலுவலகத்தில் இருக்கும் ஜெயிலர் ஒருவரைப் பிடிப்பதற்கு கழகத்தைச் சேர்ந்த வாசுதேவனையும், தட்சணாமூர்த்தியையும் நியமித்தோம். இந்த மூன்று அதிகாரிகள், மேலும் எட்டு அதிகாரிகள் கடமையில் இருந்தனர். அவர்களில் மூவர் எமது கட்டிடத்தினுள் இருந்தனர். ஏனைய ஐவரும் [illegible]னைய பகுதிகளில் கடமையில் இருந்தனர். பிரதான வாயிலுக்கும், ஜெயிலரைபிடிக்கச் செல்பவர்களும் கட்டிடத்தில் இருந்து செல்லும் வழியில் எந்த அதிகாரியைக் கண்டாலும் அவரைப் பிடித்து பின்னே இருப்பவர்களிடம் ஒப்படைத்துச் செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. பிடிப்பவர்களுக்கு பிளாஸ்டர் ஒட்டுவது, கைகளைக் கட்டுவது ஆகிய பொறுப்புகளை "தமிழீழ விடுதலைப்புலிகள்" இயக்கத்தைச்சார்ந்த நித்தியானந்தனும், டாக்டர். ஜெயகுலராஜாவும், வணபித சின்னராசாவும், "தமிழ் ஈழமக்கள் விடுதலைக் கழகத்தைச்" சார்ந்த பாபுஜியும், ஞானவேல் மற்றும் டேவிதரனும் பொறுப்பு ஏற்றனர். இதுதவிர கீழ்தளத்திலிருந்த கூட்டத்தினர் 14 பேரைத் திறந்துவிடுவதற்கான பொறுப்பினை "தமிழ்ஈழ விடுதலைப் புலிகள்" இயக்கத்தைச் சேர்ந்த ஜெயதிலகராஜா, த. மகேஸ்வரனின் நண்பரான சுப்பிரமணியமும் பொறுப்பேற்றிருந்தனர்.

<u>திருமதி. நிர்மலா நித்தியானந்தனை அழைத்து வரும்பொறுப்பு, தேவானந்தாவிடமும்</u>, கட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் இருக்கும் இராமநாதனை தூக்கி வரும் பொறுப்பு ஞானசேகரனிடமும், பவானந்தனிடமும் வழங்கப்பட்டிருந்தது. முக்கியமான உள்வேலைகளில் பெரும் பகுதியைக் கழகமே செய்து முடித்தது! வெளியில் வாகனம், படகுகள் கழகத் தோழர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது! படகுகளில் இருந்து இறங்கியதும் திருமலைவரை வழிகாட்டியது கழகஅங்கத்தவர்கள்! பின்னர் "ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச்" சேர்ந்த [illegible]8பேரும் திருமலையிலிருந்து பிரிந்து சென்றனர்.

இந்த சிறை உடைப்புத் திட்டங்கள் கழகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டது! அதற்குத் தம்பிப்பிள்ளை மகேஸ்வரனும், ஜெயதிலகராஜாவும் பெரிதும் உதவினர்! "ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி" இயக்கத்தினரை திறந்துவிட்டது ஜெயதிலகராஜாவும், சுப்பிரமணியமுமே. திறந்ததும் அவர்கள் செய்தது தமது உடைபுடவைகளுடன் நாம் (கழகம்) ஒழுங்கு செய்த வாகனங்களில் ஓடிபோய் ஏறிக்கொண்டதே!

எமது வாகனங்களிலும், படகுகளிலும் ஏறிவந்த இந்தக் குழுவினர் (ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி) தாம் தான் இந்தச் சிறை உடைப்பு நிகழ்ச்சியைச் செய்து முடித்தது என்று அறிக்கைவிட்டது ஆச்சரியமும், ஆத்திரமும் ஊட்டக்கூடிய செயலாகவுள்ளது! வெளி ஒழுங்குகள் எப்படி எப்படிச் செய்யப்பட்டன. வாகனம் பிறருடையது. வாகனங்கள் யாருடையது? பனிச்சங்கேணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யில் இறங்கியவர்களுக்கு எந்த இயக்கம் வழி காட்டியது?என்பது பற்றி எதுவுமே தெரியாதவர்கள் இதில் உரிமை கோரியிருப்பது பெரும் பித்தலாட்டமாகவுள்ளது! இவர்களை விட பிரபாகரன் இயக்கத்தைச் சேர்ந்த ஐவரும் உள்ளே தமது கடமைகளைச் சரிவரச் செய்ததுடன் இவர்களைத் திறந்துவிட்டதே அவர்கள்தான்!

திரு.டேவிற் ஐயா அவர்கள் எதற்காக "ஈழமக்கள் புரட்சிகர முன்னணி"என்று கூறும் தேவானந்தா என்பவரையும் அழைத்து எம்முடன் இணைத்தார் என்பதையிட்டு நாம் இப்போது மனவருத்தப்படுகிறோம்!

இதுவரை எந்தவித மறுப்பறிக்கையும் இந்த இரு "ஈழ மக்கள் விடுதலை முன்னணி"குழுவினரது உரிமைக் கோரிக்கைக்கும் எதிராக நாம் விடுத்ததில்லை!இந்த அறிக்கைகள் விடுத்தவர்களை நாம் நேரில் சந்திக்கவேண்டியுள்ளது!

இந்தச்சிறை உடைப்பின் உண்மை விபரங்கள்"மக்கள் பாதை" பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவரும்.அதில் அனைவரது பங்களிப்புகளும், மிகத் தெளிவாக விளக்கப்படவுள்ளது!

குறிப்பு: இவ்விவரங்கள் திரு.ஞா. ஞானசேகரன் அவர்களிடமிருந்து பெறப்பட்டது.

மட்டக்களப்புச் சிறை வரைபட விபரங்கள்

1. பிரதான வாயில் 2. இரண்டாவது கம்பிக் கதவ 3. காவல் அறை 4. பெண்கள் பகுதி (நிர்மலா நித்தியானந்தன்) 5. சிறை அலுவலகம் 6. கிணறு 7. பார்வையாளர் அறை 8.கைதிகள் பார்வையாளரைச் சந்திக்கும் அறை. 9. அலுவலர் மலசல கூடம் 10. ஜெயில் ஓ.பி.டி. 11. நோயாளர் பகுதி 12.சலூன் 13.களஞ்சிய அறை 14. சிறைக் கைதிகள் மலசல கூடம் 15. தண்ணீர்த் தொட்டி திருத்த வேண்டியது 16. வழக்கறிஞர் கைதிகளைச் சந்திக்கும் இடம். 17.அலுவலர் இளைப்பாறும் அறை 18.மண்டபம் 19.ஆர்.சி. பிரிவு 20.கோவில்(பிள்ளையார்) 21.சாதாரண விளக்க மறியல் கைதிகள் 22.'சி' மண்டபத்துக்கு செல்வதற்கான படிக்கட்டும்,வழியும் 23. 'சி' மண்டபம் 24. குசினி 25. பௌத்த விகாரை,போதி மண்டபம் 26.'ஜி' வார்டு 27.'எப்' வார்டு 28.காவலர் வெளிப்பகுதியை கவனிக்கும் சிறிய இரும்பு ஜன்னல் 29. தண்டிக்கப்பட்ட சாதாரண கைதிகள்.

செய்தித் தகவல் திணைக்களம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.
**Published by the Press & Information Secretariat of the P L O T.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்